A. உக்கார வைத்தாளே...

B. வைத்தாளே...

A. புள்ளையார் கோயல்லெ கொண்டாந்து

B- ஆ.

A. சாமி ரண்டு பேரெ உக்கார வைத்து,

B. ஆ.

A. செல்லாத்தா

B. ஆ.

A. கல்க் கட்டிடல்

B. ஆ.

A. உக்காந்து இருக்கிறளே...

B. இருக்கிறளே --

A. திண்ணிக்கி வர ஜனங்கெல்லாம் பார்த்தா

B. ஆ.

பாட்டு:

A. சூரியனைப் போலே யாங்கே
துலங்குது குழந்தையாங்கே

B. சூரியனைப் போலேயல்ல
துலங்குதே குழந்தையாங்கே

A. சூரியனைப் போலே யாங்கே
துலங்குது குழந்தையாங்கே

B. சூரியனைப்போலேயல்ல
துலங்குதே குழந்தையாங்கே

A. இந்திரனைப் போலேயது
விளங்குது குழந்தையது

B. இந்திரனைப் போலே யல்ல
விளங்குதே குழந்தையாங்கே

A. சந்திரனைப் போலே யாங்கே
துலங்குது குழந்தையாது

B. சந்திரனைப் போலேயல்ல
துலங்குதே குழந்தையாங்கே

A. இந்திரனைப்போல், சந்திரனைப்போல் அப்படியே

B. ஆ.

A. துலங்குது குழந்தையது...

B. குழந்தையங்கே...

A. தண்ணிக்கி வர்ர ஜனங்களெல்லாம்பார்த்து தெவெட்டார்கள்

B. ஆ.

A. பயந்து. அப்போ,

B. ஆ.

A. "அம்மா!

B. ஆ.

A. தண்ணிக்கி வார பெண்ணுகளே!

இந்த அஞ்சு வருஷத்திக்கி முன்னலெ

B. ஆ.

A. அறபது வயசு சென்ற

B. ஆ.

A. ங்கக்காரனும், அவனுடைய நாதனும்

B. ஆ.

A. இந்தூருக்கு வந்தாங்களாம் கூத்தநெல்லுக்கெத்தறதுக்கு.

B. ஆ. "

A. பார்த்திருக்கிறீர்களா?

B. ஆ.

A. "அம்மா எங்களுக்குத் தெரியாது."

B. ஆ.

A. "ஆகா, அப்பதயா. சாமி!

B. ஆ.

A. இது வீரப்பூர்.

B. ஜொ.

A. எத்தினியோ ஜனங்கள்

B. ஆ.

A. தண்ணிக்கு வருவோங்க.

B. ம்.

A. நான் உன்னுடைய தாய் தகப்பன் இரெண்டு பேரையுந் தேடி
உங்கக்களை இருக்கறதும்,

B. ஆ.

A. வேறு ஊரு போனதும் விசாரித்து வருகிறேன்.

B. ஆ.

A. எத்தினியோ ஒரு வயசுப் புள்ளையெல்லாம் தண்ணிக்கி
வருவாங்க.
நீங்க (குடி மாந்தனை ? ) தொலு செய்து போடாதீங்க.

B. ஆ.

A. ஆறு, ஏழு கோடு கிழிச்சு விடுகிறேன்.

B. ஆ.

A. பூமியைப் பார்த்த கண்ணு பிறகண்ணைப் பாராமல்

B. ஆ.

A. அப்படியே இருக்கவேணும்"...

B. தாங்கி நாதா ...

A. செல்லாத்தா ஏழு கரம் போட்டு, "நா-- நா வருவேன் வர்ரதுக்-
குள்ளாக

B. ஆ.

A. ஏழு கரமும் தாண்டக் கூடாதுன்னு"

B. ஆ.

A. வழிமறிச்சு,

B. ஆ.

A. உக்கார வைத்துவிட்டு,

B. ஆ.

A. வீரப்பூருக்குள்ளாக

B. ஆ.

A. தேடி வருகிறளே ...

B. ~~[illegible]~~ வருகிறளே ...

பாட்டு:

A. ஈங்கக்கா வரக் காணீர்களா
அண்டை வீட்டுப் பெண்களா
ஈங்கக்கா வரக் காணீர்களா

B. அண்டை வீட்டுப் பெண்களா
ஈங்கக்கா வரக் காணீர்களா

A. அஞ்சு வளைமாச்சு
அவெங்கிளி இங்கெவந்து

B. அஞ்சு வளைமாச்சு
அவெங்கிளியெ இங்கெ வந்து

A. ஈங்கக்கா வரம் காணீர்களா
அண்டை வீட்டெ

B. அண்டை வீட்டுப் பெண்களா
ஈங்கக்கா வரக் காணீர்களா

கேலேர் 30 செட

A. "அம்மா அஞ்சு வளைத்திக்கி முன்னாலெ

B. ஆ.

A. அறவது வயசாகி குழந்தை, பெண் குழந்தை பெத்துக் கொண்டு

B. ஆ.

A. அரியஞ் சிவனு வர பார்த்திங்களா?"

B. ஆ.

A. "அம்மா, எங்கிருக்குதே தெரியாது.

B. ஆ.

A. அந்த வீதியில் போய் கேளுங்க."

B. ஆ.

பாட்டு:

A. அந்த வீதி தானுமல்ல அந்த வீதி தானுமல்ல
அந்த தெருவழி நடந்தா
அந்த வீதி தானுமல்ல

அந்தத் தெரு தாண்டியல்ல

அந்த வீதி வழிநடந்தா

அந்த வீதி தாண்டியல்ல

A. அம்மா அண்டை வீட்டுப் பெண்களா

ஙக்கா வரக் காணீர்களா

B. – காணீர்களா

அண்டை வீட்டுப் பெண்களா

A. குழந்தையை எடுத்துக் கொண்டு

கொம்பியாள் வந்ததுண்டா

B. குழந்தையெடுத்துக் கொண்டு

கொம்பியாள் வந்ததுண்டா

about 54 sec.

A. அஞ்சு வருஷமாச்சு

அருங்கிளி இங்கே வந்து

ஙக்கா வரக்

B. அஞ்சு வருஷமாச்சு

அருங்கிளியாள் இங்கே வந்து

அஞ்சு வருஷமாச்சு

A. ஙக்கா வரக் காணீ.

ஙக்கா வரக் காணீர்களா

அண்டை வீட்டுப் பெண்களை

with B. — ஙக்கா வரக் காணீர்களா

A. "அம்மா!

B. ஆ.

A. அஞ்சு வருஷத்திக்கி இன்னைல

B. ஆ.

A. ஒரு குழந்தையெடுத்து,

B. ஆ.

A· வயிசான காலத்திலெ,

அரியாஞ்சிவனு. ஙக்காவெ நீங்க பார்த்தீர்களா?"

B· ஆ.

A· "அம்மா நாங்க ஒன்னும் பார்க்கிலெ."

B· ஆ.

பாட்டு:-

A· இனி அந்தத் தெதெ தாண்டியல்ல

அதேத் தெகெ வழிநடந்தா

அந்தத் தெதெ தாண்டியல்ல

B· — தாண்டியல்ல

அதேத் தெகெ வழிநடந்தா

அந்தத் தெகெ தாண்டியல்ல

About 29 sec.

A· வெட்டுவெ ராஜனுட ~~[illegible]~~

அரண்மீக்கு வந்துநிங்கெ

B· வெட்டுவெ ராஜனுட

அரண்மீக்கி வந்து நின்னு

A· ஙக்காவரக் காணீர்களா

with B· — அண்டை வீட்டுப் பெண்களா

ஙக்காவரக் காணீர்களா

A· "அம்மா! அந்த வரைத்திக்கி முன்னுள்ள

B· ஆ.

A· அரியிஞ்சிவனு, அவது வயிசான காலத்திலெ குழந்தையெடுத்-

துக்கிட்டு வர்ரதை பார்த்திகெகிறீங்களா?"

B· ஆ.

A· "அம்மா இங்கிதான் இருக்கருங்க."

B· ஆ.

A· "அப்பயா!

B· போச்சாது.

A. எந்த இடத்தில் இக்கேளெங்கப்பா?"

B. ஆ.

A." இதபாரு தெக்கெ அந்த உறைக் கொட்டாரத்தில்,

B. ஆ.

A. அறவது வயசிருக்கேமெங்க,

B. ஆ.

A. ஒரு பெண்குழந்தை. வாஸ்தவெங்காளுங்க.

B. ம்.

A. ஆளு

B. ம்.

A. காமிக்கிறெ வாங்கன்னு"

B. ஆ.

A. ஒரு குழந்தை கொண்டெட்டுப் போயி "இதபாருங்க இந்த பக்கத்துலெ போயி மெக்கெயின்னு திரும்புனீங்கன்னு,

B. ஆ.

A. அந்த தெக்கெவாசல் அதிலெக்கெங்கன்னு" காமிச்சுப்பொட்டு அது வந்திட்டது.

B. ஆ.

A. அப்போ,

B. ஆ.

A. காலெலெ வரும்போது

B. ஆ.

A. தெம்பறத்திலெ மெக்கேன்னு வந்தா, நெழலங்கெ

B. ஆ.

A. முக்காடு போட்டது

B. ஆ.

A. அந்த நெழலப்பிடிய தேடி. சாமி குழந்தையெ வெச்சு தெக்கேன்னு உக்காந்திருக்காரு.

B. ஆ.

A. பருவதியா காப்பழி அரிசியெப் போட்டு பொங்கிக்-கிட்டு இருக்கிறது.

B. ஆ.

A. குழந்தையெ நா( ? ) தெக்கிலெண்ணு உக்காந்துக்-கிட்டிருக்காங்க.

B. ஆ.

A. அந்த நெழல் அங்கெ தெரிது.

B. செரி.

A. "பொண்ணே!

B. ஆ.

A. அஞ்சு வருஷமாத்தே நாம வந்து.

B. ஆ.

A. ஒரு குழந்தையாவது நம்ம வீட்டுக்கு வர்ரதில்லெ.

B. ஆ ஆ.

A. யாரோ ஒரு நெழல் சாயிது

B. ஆ.

A. வடவறமா, நிக்குது எட்டிப்பாரு!"

B. ஆ.

A. "நாதா! இங்கெ ஆரு ஒருத்தரு வரமாண்டாங்க."

B. சரி.

A. "இல்லையம்மா. ஒரு நெழல் சாய்ந்து

B. ஆ

A. அப்புறமே நின்னிருக்கிறது. யாருன்னு பாரு!"

வந்து எட்டி மேற்கெ பார்த்தா ( ? ) தெக்கெ

அப்படீன்னு திரும்பிப் பார்த்தா

B. ஆ.

A· நாதா

B· ஆ.

A· அந்தக் கூடப்போட்ட செல்லக்கா வந்திருக்கா."

B· ஆ.

A· "பெண்ணெ யாரது?"

B· ஆ.

A· கூடப்போட்ட செல்லக்காரா(ன்) ~~[illegible]~~ ^ நம்மளெ முடிக்குனல்ல

B· ஆ.

A· அந்த சண்டாளி! அவ வந்து நின்னுக்கிட்டிருக்கா."

B· ஆ.

A· "கழுதெ முண்டெ! இல்லாத சேட்டை பண்ணுதெ.

நீ, செல்லாத்தாளெ சண்டெப்புழக்காதெ.

B· ஆ.

A· நீ வெச்சு வெளக்கி, செல்லாத்தா என்ன பண்ணுவா?

B· ஆ.

A· செல்லாத்தா வந்திருக்களா!

B· ம்.

A· ஆத்தா நீ வந்திட்டயா சாமி"

B· ஆ.

A· எஞ்சாமி எந்திரிச்சு வந்து

B· ஆ.

A· செல்லாத்தாளெ ரெண்டு கையையும் புடிச்சு,

B· ஆ.

A· வீட்டுக்குள்ளெ கொண்டுபோயி

B· ஆ.

A· உக்கார வைத்தாரே...

B· வைத்தாரே...

A· "செல்லாத்தா!

B· அ.

பாட்டு:-

/

A· நாங்க நாடிழந்து நாடிழந்து

நகரிழந்து நாங்க நகரிழந்து

B· ஐயோ நகரிழந்து நகரிழந்த

A· சண்டாளி நாங்களண்ட செல்லாத்தா

நாஙண்ட மண்ணிழந்து ஆத்தா மண்ணிழந்து

B· ஆத்தா நாடிழந்து நாடிழந்து

நகரிழந்து நல்ல நகரிழந்து

A· அம்மா நகரிழந்து ஆத்தா நகரிழந்து

B· அங்கே நாஙண்ட நாஙண்ட

சீமைவிட்டு நல்ல சீமைவிட்டு

A· ஆத்தா நாங்க பொன்னிழந்து செல்லாத்தா

பொருளிழந்து ஆத்தா பொருளிழந்து

B· அங்கே பொருளிழந்து நல்ல பொருளிழந்து

A· ஆத்தா நாங்க பூமிபதி பங்காளிக்கி

நாணிழந்து ஆத்தா நாணிழந்து

B· அங்கே பொன்னிழந்து பொன்னிழந்து

பூவிழந்து நல்ல பூவிழந்து

A· ஆத்தா பொருளிழந்து அங்கே பொருளிழந்து

About 1 min and 50 sec

B. அங்கே பூமிபதி பூமிபதி

நானிழந்து நல்ல நானிழந்து

A. ஆத்தா நாங்க மண்ணிழந்து

செல்லாத்தா உம்பட மண்ணு வெறுத்துப்போச்சே

நானினி மனையிழந்து ஆத்தா மனையிழந்து

B. அங்கே சொல்லாதே இன்னுடையார்

சொல்லுறாரே நல்ல சொல்லுறாரே

~~A. நாங்க~~

A. நாங்க மண்ணிழந்து மனையிழந்து மனையிழந்துவந்துட்டமே

B. வந்திட்டனே...

A. செல்லாத்தா!

B. ஆ.

A. அவ்வளவு திரவியத்தையும் பங்காளிக்கு தத்தம் செய்து,

B. ஆ.

A. நாம நகரை கிழந்து,

B. ஆ.

A. நம்பட தேசத்தை கிழந்து

B. ஆ.

A. ~~இந்த~~ மரப்பூர் வந்து அஞ்சுவகுஷமா

B. ஆ.

A. கூத்த நெல்லுக் இத்தி

B. ஆ.

A. கூலிச் சீவனம் செய்யரெஞ் செல்லாத்தா...

B. செல்லாத்தா...

A. ஆத்தா! சண்டாளி கையைப் போய் பாரம்மா.

B. ஆ.

A. சாந்து புனுகு பூசுன கையவ்வளவும்,

B. ஆ.

A. கையவ்வளவு பட்டை பட்டையா ஆணியுழுந்திருக்குது.

செல்லாத்தா!

B. ஆ.

A. அஞ்சு வருஷமா கூத்த நெல்லுக் குத்தி,

ஆத்தா! கூடப்போட்ட முண்டை நீ ஆத்தாளை சண்டைப்

புடிக்கறயா! நல்லா இருக்கறயாம்மா"ன்னு

B. ஆ.

A. தலையெ நீவி, சாமி.

B. ஆ.

A. தெய்வசபையிலெ பிறந்தவளல்லவா?

B. ஆ.

A. அழுதெரன்னேரா ---

B. அந்நேரம் ---

A. சொல்றதெல்லாஞ் சொல்லி செல்லாத்தா ஒன்றும் பேசுலெ.

B. ஆ.

A. "செருத்தாங் கம்முனிருங்க. அந்தக் கூடப்போட்ட செல்லக்காகிட்டெ

என்ன உங்குணுக்கு இப்ப அவ வந்து, இப்ப. அவிக்கக்கி வாரபோது

வந்து தைத்தாளாக்கு.

B. ஆ.

A. இல்லெ பங்காளியெ ஏ முடிக்கறேன்னு கேட்டாக்கு. அவுனுக்-

கிருக்கற மனத்துவெ, அடட! சாமீ!

B. ஆ.

A. அவுருக்கிருக்கற ~~[illegible]~~ மவுத்துவொ! இன்ன

B. ம்! ம்! ம்!

A. சொல்ல முடியாது.

B. ஆ.

A. அவகிட்ட என்ன பேச்சு? வந்துட்டுப் போறு."

B. ஆ முடி.

A. "கழுதெ முண்டெ! செருப்புல வெச்சுப் போடுவெ இல்லாத சேட்டெ

மயிரு பண்ணுனீங்க.

B. ஆ.

A. அப்பர நிய்யி வெச்சு வெளக்கி அவென்ன பண்ணுவா?

ஆத்தா! நல்லா இருக்கறயா? ஆத்தா!

B. ஆ.

A. நாங்க நாட்டெ வுட்டு வந்தாலும் போச்சாது மூணுகால

பூசையி நடக்குதோ?"

B. ஆ.

A. "என்னமோ அப்பா நடக்குது. இண்ணைக்கு யாக் கவுண்டா!

B. ஆ.

A. நடக்குது.

B. ஆ.

A. ஆது

B. ஆ.

A. அப்பா!

B. ஆ.

A. நானஞ்சு வருஷம் (நான் அஞ்சு வருஷம்)

B. ஆ.

A. கொடியெக் கை வெந்தி

B. ஆ.

A. உன்னுடைய மக்களை நா வளத்துனெ.

B. செரி.

A. இனி, ஒரு நிமிச நா வெச்சிருக்க முடியாது.

B. ஆ.

A. எம்பெருமான் மாயவர் இடி போட்டார்

B. ஆ.

A. 'அஞ்சு வருஷத்திக்கி நீ வளத்து

B. ஆ.

A. தாயோட புள்ளையா சேத்தி உட்ருவோமின்னு.

B. ஆ.

A. உன்னுடைய குழந்தைய நீ வந்து ஒப்புக் கொண்டுக்க."

B. ஆ.

A. சொல்லுகிறு ஈஸ்வரியா...

B. ஈஸ்வரியா...

A. "என்ன செல்லாத்தா? காது கேக்கச் சொல்லு! எருபத்தஞ்சாயிக்-கிட்டுதெ.

B. ஆ.

A. மேவறத்துக் காது அரெச் செயலா கூடியமுட்டுக் கேத்திப்-பாத்தெ, ஒரு துளிக்கூட ஒட்டெ தெடையாது செல்லாத்தா.

B. ஆ.

A. யாரு குழந்தெ? எங்கத்த குழந்தை?"

B. ஆ.

A. "இன்னுடையாக் கவண்டா!

B. ஆ.

A. ஐய்யீ உன்னுடைய மனைவியும் போயி

B. ஆ.

A. காசி பொன்னம்பலம் தஞ்சிக் கோம்பையிலெ,

B. ஆ.

A. ஸ்ரீவைகு திருவந்தி ஒலெவவேஷம் அரசமரத்திலெ

B. ஆ ஆ.

A. தவசுக் கம்பம் நட்டு தவமிருந்து,

B. ஆ.

A. மண்ணுக்கு ரண்டாமெ மீனயாருக்கப் பெண்ணெருவி

B. ம்.

A. வரம் வாங்கி வந்து,

B. ஆ.

A. தாமரைக்கி ஏழுமாதமான காலத்திலெ

B. ஆ.

A. தங்கவளநாட்டு சதிகார பங்காளிக் கவண்டக

B. ஆ.

A. குப்பியெக் கூப்பிட்டு,

B. ஆ.

A. குப்பீ!

B. ஆ.

A. பொன்னிவள நாட்லெ தாமரைக் கவுணிச்சி

B. ஆ.

A. குழந்தைவரம் பெற்று வந்து ஏழுமாதமாகுது.

B. ஆ.

A. ஆண் குழந்தை பிறந்தால் அறுத்தீ பெருக்கான் வங்கிலெ

துனிச்சுப் போடு.

B. சரி.

A· உனக்கு

B· ஆ.

A· ஆயரமா நெலத்திலெ பகுதி,

B· ஆ.

A· திரவியத்திலெ பகுதி பங்குபோட்டுத்தாரமின்னு
சதிகாரப் பங்காளிக சொல்லிக்கிட்டு,

B· ஆ.

A· பரந்தாமன்! மாயவர்! அதை அறிந்து வங்கிட்ட வந்து,

B· ஆ.

A· செல்லாத்தா!

B· ஆ.

A· உன்னுலெ ஒரு காரிய ஆகவேண்டுமின்னு சொன்னரு.

B· ஆ.

A! என்னங்க சாமின்னு கேட்டை.

B· ஆ.

A· நான் இந்தவரத்திலெ இறைவந்து சேர்ந்துவெம்.

B· ஆ.

A· தந்தவரத்தினெ திவக்குறை நேரும்போரிக்குது.

B· ஆ.

A· சதிகாரப் பங்காளிக சொல்லிக்கிட்டு,

B· ம்.

A· தாமரை வயிற்றில் ஆண்குழந்தை பிறந்தால் அறுத்து வெக்கோல்
வங்குலெ தனிக்கும்படியா

B· ஆ.

A· சதிகாரப் பங்காளிக சொல்லிருக்காங்க.

B· ஆ

A. அதுல மூணுமாசத்திக்கி முந்தியல உன்னுடைய சன்னதிக்கும்,

B. ஆ.

A. அவங்களுடைய அரமனைக்கும் நீ தெவரை ஒன்னு செய்து வெச்சிடு.

B. செரி.

A. அந்தப் பொதுமான காலத்திலெ நா வந்து,

B. ஆ.

A. அப்ப, அவர்களை வெளிப்படுத்துகிறேன்.

B. ஆ.

A. நீ கொண்டுபோய் அஞ்சு வருஷத்திக்கி வளர்த்த வேண்டும்.

B. ஆ.

A. அதற்குமேல்பட்டு தாயோட புள்ளையா சேத்தியுட்டாள்ன்னு சொல்லிருக்காடு.

B. ஆ.

A. அதுலெ நான் அஞ்சு வருஷம் வளத்திடுவேன்.

B. ஆ.

A. இன்னி வெச்சிருந்தா என்னுடைய உயிருக்கு ஆபத்து வரும்.

B. ஆ.

A. பிள்ளையார் கோயில்லெ இருக்கார்

B. ஆ.

A. வந்து, நீங்க உங்களுடைய குழந்தையை

B. ஆ.

A. ~~[illegible]~~ எடுத்துக்கின்னு சொல்லியிட்டா ஈஸ்வரியெ...

B. ஈஸ்வரியா...

A. "நாதா!

B. ஆ.

A. அவனுக்கு ஒரு கேவல மேற்பட்டதலாமுன்னுங்க

B. ஆ.

A. நாம குழந்தையெ(பெத்தா?) பாக்கலா இவ என்ன பண்ணுவா

அஞ்சு வருஷமா போயிட்டு வந்தவ ஒரு கொறையிந் நரையிந்

சொல்லுவாமின்னு, அவ, அவ்வளவு மயர்த்துவகாரி அவ.

B. ஆ.

A. நாம பெத்தமா? புழுச்சமா?

B. ஆ.

A. ஒரு கேவலம் பண்ணலாமுன்னு ~~[illegible]~~ சொல்றோங்க நாதா."

B. ஆ.

A. "கழுதை முண்டே! பேசாமிரு, நிய்யா!

B. ஆ.

A. அப்பவு தெய்வாத்தா பொய்யெச் சொல்லுவாளா?

B. ஆ.

A. ஏத்தா புள்ளையார் கோயில்லெ இருக்கிறா?"

B. ஆ.

A. "நா பொய்யெ சொல்வனப்பா?

B. ஆ.

A. நிய்யு வந்து பாரு!

B. ஆ.

A. உன்னுடைய கொழந்தையெ நீ எப்புக் கொண்டுக்க" அப்-

பிண்ணுட்டாரு.

அரியஞ்சிவனு அன்னமும் பெட குழந்தையெகெத்துக்கிட்டு

B. ஆ.

A. செல்லாத்தா மீண்டும் வரும்

B. ஆ.

A. பிள்ளையார் கோயிலுக்கு வந்து பார்க்கும் போது,

B. ஆ.

பாட்டு:-

A. சந்திரனைப் போலே யங்கே
துலங்குது குழந்தையது
சந்திரனைப் போலே யங்கே
5

B. சந்திரனைப் போலே நல்ல
துலங்குதே குழந்தை ரண்டு

A. இந்திரனைப் போலே யங்கே
விளங்குது குழந்தையது

B. இந்திரனைப் போலே யல்ல
விளங்குதே குழந்தை ரண்டு

A. சாந்திரனைப் போலே யல்ல
துலங்குது குழந்தையது

B. சாந்திரனைப் போலே யல்ல
விளங்குதே குழந்தை ரண்டு

(margin: about 30 sec)

A. தங்கத்தைக் காய்ச்சி தரையில் கவுத்தது போல்,

B. ஆ.

A. பொன்னை உருக்கி பூமியில் விட்டது போல்,

B. ஆ.

A. பூமியைப் பார்த்த முகம் பிறகண் பாராமல்

B. ஆ.

A. உக்காந்து இருக்கிறாரே...

B. இருக்கிறாரே...

A. "ஆகா, நாதா!

B. ஆ.

A. நம்முடைய குழந்தைன்னு நாம எப்படி ஒப்புக் கொள்றது?

B. ஆ.

A. சூரியப் பிரகாசம்போல் இருக்கனெங்க."

B. ஆ.

A. "அப்பா, இன்னுடையாக் கேவண்டா!

B. ஆ.

A. இரண்டும் உன்னுடைய குழந்தைதான், நீ ஒப்புக் கொண்கெக," அப்படீன்னுட்டார்.

B. செரி.

A. "நாதா! எனக்கு மனசமாதானமில்லே,

B. ஆ.

A. எல்லாம், எம்பட பாலமலெ சொகியா! பரம இரு தன்னசி! ஏழைப் பரதேசி எம்பெருமான் மாய.

B. மாயவனே! ...

A. வீரப்பூக்கெ

B. ஆ.

A. தங்களை வரவழைக்கிறேன்.

B. ஆ.

A. சீக்கிரம் வரவேண்டும் காஞ்சிநாதா!..."

B. காஞ்சிநாதா ...